2014

2014

No. of Printed Pages : 4

**4372**

*Register Number* | | | | | | | |

**Second Year**

701913

# அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி ] [ உச்ச மதிப்பெண்கள் : 100

**குறிப்பு :** பகுதி II, பகுதி III -ல் ஒரு வரிக்கு 5 சொற்களுக்கு குறையாமலும், ஒரு பக்கத்திற்கு 20 வரிகளுக்கு மிகாமலும் விடையளித்தல் வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு - அ (பாடப் பொருள்)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. **10x2=20**

**1.** ஒளி எதிரொளித்தல் என்றால் என்ன?

**2.** காந்தமாக்குதல், காந்தநீக்கம் இவற்றை வேறுபடுத்துக.

**3.** தீக்குச்சி எரியும்போது ஏற்படும் ஆற்றல் மாற்றத்தை விளக்குக.

**4.** சந்திரனில் நீவீர் ஒலியை கேட்டுணர முடியுமா? ஏன்?

**5.** ஆரஞ்சு, தேனீக்களின் கொடுக்கு, தக்காளி, சிறுநீரிலுள்ள அமிலங்கள் யாவை?

**6.** வைரஸினால் மனிதர்களுக்கு ஏற்படும் நோய்கள் நான்கினைக் குறிப்பிடுக.

**7.** ''போதை மருந்திற்கு அடிமையாதல்'' என்பது பற்றி நீவீர் அறிவதென்ன?

**8.** பொதுவாக தெரிந்த மருத்துவ குணமுள்ள தாவரங்கள் நான்கின் பெயர்களைக் கூறுக.

**9.** மட்கும் குப்பைகள் யாவை?

**10.** மின் சலவைப் பெட்டி (Iron Box) எந்த தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது?

[ Turn over

## பிரிவு - ஆ
## (கற்பிக்கும் முறை)

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. **10x2=20**

11. புளியில் அமிலம் உள்ளதென்பதை எவ்வாறு நிரூபிப்பாய்?

12. விதை முளைப்பதற்குத் தேவையான காரணிகள் யாவை?

13. அறிவியல் கண்காட்சி அமைப்பதற்கு பின்பற்றப்படும் படிநிலைகள் யாவை?

14. களப்பயணம் சென்று பார்ப்பதற்கு ஏற்ற சில இடங்களை குறிப்பிடுக.

15. செயல் திட்ட முறை குறித்து கில்பாட்ரிக் (Kil Patrick) என்பாரின் கருத்து யாது?

16. விதி வரு முறையின் நன்மைகள் நான்கினை கூறுக.

17. வானொலி, தொலைக்காட்சி மூலம் கற்பிக்கும் முறை நல்ல பயனளிக்காது. ஏன்?

18. படைப்பாற்றல் கல்வியின் நான்கு கற்றல் முறைகள் யாவை?

19. மன வரைபடம் மூலம் எளிமையாகக் கற்பிக்கக்கூடிய நான்கு தலைப்புகளைக் கூறுக.

20. வைரசின் வடிவம் மற்றும் உதாரணங்களை பயன்படுத்தி ஒரு மனவரைபடம் வரைக.

## பகுதி - II
## பிரிவு - அ (பாடப் பொருள்)

**குறிப்பு :** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

21. தொலை நோக்கிக்கும், கூட்டு நுண்ணோக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

22. தொடர் சுற்றினை படத்துடன் விவரி.

23. ஆற்றல் மாற்றம் பற்றி விளக்குக.

24. குறுக்கலையின் பண்புகள் யாவை?

25. விவசாயத்துறை மற்றும் புகைப்படத்துறையில் உப்புக்களின் பயன்கள் யாவை?

26. நீரின் மூலம் பரவும் நோய்கள், நோய்களுக்கான காரணங்கள், கட்டுப்படுத்தும் வழிமுறைகள் போன்றவற்றை அட்டவணைப்படுத்துக.

27. சுற்றுச்சூழல் கல்வி தொடர்பான பள்ளி இணைச்செயல்பாடுகளை விளக்குக.

28. பொது இடங்களில் அறிவியலின் பயன்பாடுகள் யாவை?

## பிரிவு - ஆ

## (கற்பிக்கும் முறை)

**குறிப்பு :** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கு **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x4=20**

29. கண்டறி முறையின் படிநிலைகள் யாவை?

30. கண்டறி முறையின் மாதிரியை விளக்குக.

31. கண்டறி முறையின் வரம்புகளைக் கூறுக.

32. செயல் திட்ட முறையின் நோக்கங்கள் பற்றி எழுதுக.

33. விதி வரு முறையின் முதல் படிநிலையான "பிரச்சினையை உணர்தல்" என்பதை விளக்குக.

34. பல் ஊடக உட்கூறுகளான

    (அ) நகர்படம்

    (ஆ) பட வரைவுகள்

    (இ) நிகழ்படம் ஆகியவற்றை விளக்குக.

35. படைப்பாற்றல் கல்வி முறையின் (Active learning method) தனிச்சிறப்புகளை எழுதுக.

36. வைரஸ் பற்றிய கருத்துக்களை மனவரைபடம் மூலம் விளக்குக.

[ Turn over

## பகுதி - III

குறிப்பு : **இரண்டு வினாக்களுக்கு** ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி **2x10=20**

37. (அ) பள்ளி அளவிலான ஓர் அறிவியல் கண்காட்சியை எவ்வாறு நீவீர் நடத்துவீர்? விளக்கம் தருக.

**அல்லது**

(ஆ) செயல் திட்ட முறையில் மின்கடத்தும் பொருள் மற்றும் மின்கடத்தாப் பொருட்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்?

38. (அ) அவரை விதை முளைத்தலை விதி வரு முறையில் கற்பிப்பதற்கான படிநிலைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) அணு அமைப்பு என்ற பாடத்திற்கான பாடப்பொருளை கணினி வழியாக எவ்வாறு கற்பிக்கலாம்?

**- o O o -**